## ஊரீசு கல்லூரி 121வது ஆண்டு விழா

# பெண்ணுக்கு கல்வி கிடைத்தால் குடும்பத்திற்கே உறுதுணையாக இருக்கும்

### கல்வி இயக்குனர் பேச்சு

வேலூர், மார்ச் 17: வேலூர் ஊரீசு கல்லூரியின் 121வது ஆண்டு கல்லூரி தின விழா கொண்டாடப்பட்டது. நிகழ்ச்சிக்கு முதல்வர் நெல்சன் விமலநாதன் தலைமை தாங்கினார். நிதி ஆளுனர் காலேப்நோபிள் சந்தர் முன்னிலை வகித்தார். கவுரவ விருந்தினராக வேலூர் மண்டல இணை இயக்குனர் எழிலன் கலந்து கொண்டார்.

கல்லூரி கல்வி இயக்குனர் ஜோதிவெங்கடேசன் பேசியதாவது: கல்வி இல்லை என்றால் உலகில் யாருக்கும் மரியாதை இருக்காது.

ஒருபெண்ணுக்கு கல்வி கிடைத்தால் அந்த குடும்பத்திற்கே உறுதுணையாக அமையும். நூற்றாண்டுகளை கடந்த ஊரீசு கல்லூரியில் படித்தவர்கள் பல துறைகளில் சாதித்து கல்லூரிக்கு பெருமை சேர்த்துள்ளனர்.




வேலூர் ஊரீசு கல்லூரி ஆண்டு விழாவில் மாணவனுக்கு கல்லூரி இயக்குனர் ஜோதிவெங்கடேசன் சான்றிதழ் வழங்கினார். உடன் இணை இயக்குனர் ஜி.எழிலன், கல்லூரி முதல்வர் அ.நெல்சன் விமலநாதன், நிதியாளுனர் காலேப்நோபிள் சந்தர்.

கல்லூரிக்கல்வி இயக்குனரகத்தின் கீழ் தமிழகத்தில் 114 அரசு கல்லூரிகள், 139 அரசு உதவி பெறும் கல்லூரிகள், 200 கல்வியியல் கல்லூரிகள், 13 பல்கலைக் கழகங்கள் உள்ளன. இந்தியாவில் உயர்கல்வி பயில்வோரின் எண்ணிக்கை 25 சதவீதமாக உள்ளது. தமிழகத்தில் கடந்த ஆண்டில் 46 சதவீதமாக இருந்த உயர்கல்வி பயில்வோரின் எண்ணிக்கை நடப்பு ஆண்டில் 49 சதவீதமாக உயர்ந்து உள்ளது.

இவ்வாறு அவர் பேசினார்.

தொடர்ந்து அனைத்துத்துறை மாணவ, மாணவிகளுக்கு சான்றிதழ் வழங்கப்பட்டது. பின்னர் ஓய்வு பெறும் பேராசிரியர்களுக்கு நினைவு பரிசு வழங்கப்பட்டது.